www.padippakam.com

## விடுதலை புலிகளின் பிடிவாதப்போக்கு

# யாழ் தமிழர்கள் அதிருப்தி

கொழும்பு, மே 13—

இந்த மாத ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழ் ஈழ விடுதலை அமைப்பினருக்கும் (டெலோ) விடுதலை புலிகளுக்கும் (எல்டிடிஈ) இடையே நடந்த சண்டையும் அதை தொடர்ந்து டெலோ தலைவர் சிறி. சபாரத்தினம் சுட்டுக் கொல்லப்பட்டதும் அந்த பகுதி மக்களிடையே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இன்னும் மக்கள் பய உணர்வில் இருந்து விடுபடவில்லை.

தனி தமிழ் ஈழம் கோரி இலங்கையில் 30க்கும் அதிகமான போராளிகள் பிரிவுகள் ஆயுத போராட்டத்தை நடத்தி வருகின்றன. டெலோவும் விடுதலை புலிகளும் அதில் முக்கியமானவர்கள். இந்த இரு அமைப்புகளுக்கு இடையே நடந்த சண்டையின் பின்னணியை அறிய யு.என்.ஐ. நிருபர் யாழ்ப்பாணத்தில் நான்கு நாள் பயணம் மேற்கொண்டார். அவர் தெரிவித்த தகவல்கள் வருமாறு:

இரு போராளிகள் கோஷ்டிகளுக்கும் ஏப்ரல்29ல் தொடங்கிய பயங்கர சண்டை குறித்து மக்கள் பேசவே அஞ்சுகின்றனர். தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண இந்திய குழுவினர் இலங்கைக்கு வந்த நேரத்தில் சண்டை நடந்தது மிகவும் துரதிர்ஷ்டமான ஒன்று என்று மக்கள் கருதுகின்றனர்.

யாழ்ப்பாணம் நகரில் அடிக்கடி இந்த அமைப்புகள் துப்பாக்கி சண்டையில் ஈடுபட்டு வந்தன. என்றாலும் விடுதலை புலிகள் கல்லியன் காடு என்ற இடத்தில் உள்ள டெலோ தலைமையத்தில் நடத்திய சண்டை மிகவும் கொடூரமானது. அந்த பகுதி முழுவதும் ரத்த ஆறாக காட்சி அளித்தது. அதை நினைத்தாலே மனம் நடுங்குகிறது என்று மக்கள் தெரிவித்தனர். இரண்டாம் தேதி வெள்ளியன்று ஈழ புரட்சி விடுதலை முன்னணியினர் ஹர்த்தால் நடத்த வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதற்கு டெலோ இயக்கமும் ஆதரவு அளித்தது. ஆனால் விடுதலை புலிகள் இந்த ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் மக்கள் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு தரக்கூடாது. அப்படி தங்கள் உத்தரவை மீறி ஆதரவு தந்தால் இலங்கை ராணுவத்திடம் இருந்து உங்களை காப்பாற்ற நாங்கள் வரமாட்டோம் என்று விடுதலை புலிகள் எச்சரித்தனர். ஆனால் புலிகளின் எச்சரிக்கையையும் மீறி மக்கள் ஹர்தாலுக்கு முழு ஒத்துழைப்பு அளித்தனர்.

தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண தனக்கென தனி வழியை கையாண்ட சபாரத்தினத்திற்கு மக்களின் பெரும் ஆதரவு இருந்தது. முதலில் மக்கள் விடுதலை புலிகளுக்கு ஆதரவு அளித்தனர். ஆனால் விடுதலை போராட்டம் என்ற பெயரில் அவர்கள் வன்முறை செயல்களிலும், கொலை கொள்ளை போன்றவற்றிலுமே ஈடுபட்டனர். எனவே மக்களின் ஆதரவு சபாரத்தினத்தின் "டெலோ" இயக்கத்திற்கு திரும்பியது என்று வயதான ஒருவர் கூறினார்.

விடுதலை புலிகளால் கொல்லப்பட்ட டெலோ இயக்கத்தினர் அனைவரும் சிறிய வயதினர் இதில் பெரும்பாலானவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்து வந்தவர்கள். திரிகோணமலையில் உள்ள கிராமங்களில் இருந்து இவர்கள் டெலோ இயக்கத்தில் சேர்ந்தனர்.

மிகவும் சிறிய வயதான இவர்களை அதுவும் தமிழனை தமிழனே கொல்ல எப்படி மனம் வந்தது என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழ புதைந்துள்ளது. அதிலும் கைகளை மேலே தூக்கி சரணடைந்த இந்த 13வயது சிறுவர்களை கொல்ல எப்படித்தான் மனம் வந்ததோ தெரியவில்லை என்று பெரும்பான்மையான மக்கள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி, மல்லக்கம் சாவகாச்சாரி நல்லாராம் தெல்லிபல்லி ஆகிய ஐந்து இடங்களில் டெலோவை சேர்ந்தவர்கள் பெட்ரோல் ஊற்றி உயிருடன் எரிக்கப்பட்டனர். விடுதலை புலிகள் அவர்கள் துடிதுடித்து சாவதை சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர் என்று நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

விடுதலை புலிகளின் கொடுமையை நேரில் பார்த்த ஒரு தமிழ் அரசு அதிகாரி தனது அலுவலகத்துக்கு சென்று "தனி ஈழமே வேண்டாம்" என்று அழுதாராம். கோயில்கள், பல்கலைக்கழக விடுதிகள் மற்றும் பல இடங்களில் மறைந்திருந்த டெலோ இயக்கத்தினரையும் விடுதலைபுலிகள் விட்டு வைக்கவில்லை என்றனர்.

மக்கள் அமைப்பு புலிகளின் இந்த செயலுக்கு ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று கேட்டதற்கு அதற்குரிய தைரியம் யாருக்கும் இல்லை. அப்படி யாராவது கேட்டால் அவர்கள் இதயத்தில் துப்பாக்கி குண்டு பாய்வது நிச்சயம் என்றனர்.

போராளிகள் பிரிவினர் தங்களுக்குள் யார் பெரியவர் என்பதை நிரூபிக்கவே இந்த சண்டை நடந்தது. தங்களை விட சக்தி குறைந்த போராளிகள் அமைப்பை ஒழித்து விட்டு யாழ்ப்பாணத்தில் தங்களின் தனித்தன்மையை ஸ்தாபிக்கவே விடுதலை புலிகள் இந்த தாக்குதலை நடத்தினர் என்று அரசியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்திய குழுவினர் தமிழர் பிரச்னைக்கு தீர்வுகாண இலங்கை வந்த நேரத்தில் விடுதலை புலிகள் திட்டமிட்டு டெலோ மீது தாக்குதல் நடத்தினர். இந்திய தூது குழுவினருக்கும் இந்தியாவுக்கும் எதிரான போஸ்டர்கள் யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது. பொது மக்களின் பெயரால் இந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. ஆனால் இது விடுதலை புலிகளின் செயல்கள்தான் என்று மக்கள் கருதுகின்றனர். டெலோ இயக்கம் அழிக்கப்படும் என்றும் இந்திய ராணுவம் இலங்கைக்கு வந்தால் அதை தடை செய்ய மக்கள் தயாராக இருக்க வேண்டும் என்றும் போஸ்டரில் எழுதப்பட்டுள்ளது.

வங்கதேச சுதந்திர போராட்டத்தின் போது அவர்களுக்கு உதவி செய்ய சென்ற இந்திய ராணுவம் அங்குள்ள பெண்களை கற்பழித்தது. அதேபோல் இங்கு வந்தாலும் இந்திய ராணுவம் அதையே தான் செய்யும் என்று மற்றொரு போஸ்டரில் காணப்படுகிறது.

விடுதலை புலிகள் இந்திய எதிர்ப்பு பிரசாரம் செய்வது இந்தியாவின் சமரச முயற்சியை தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் என்று பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் கூறினார். தனி ஈழம் கிடைக்கும் வரை அவர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளனர்.

ஆனால் மக்கள் இப்போதைய சூழ்நிலையில் தனி ஈழத்திற்காக இன்னும் ஆறு மாதம் கூட பொறுத்துக் கொள்ள கூடிய நிலையில் இல்லை. அவர்களுக்கு இப்போதே ஒரு முடிவு தேவைப்படுகிறது. கூட்டாட்சி முறை அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சிறந்த முடிவு என்று அந்த பேராசிரியர் கூறினார்.

தமிழர் பிரச்னைக்கு இந்தியா தலையீட்டின் பேரில் கிடைக்கும் முடிவை டெலோ ஏற்றுக் கொண்டு அமைதியான அரசியல் நடத்த முடிவு செய்தது. ஆனால் விடுதலை புலிகள் தனி ஈழம் பெற்று ராணுவ ஆட்சி நடத்த விரும்புகின்றனர். எனவேதான் டெலோ இயக்கத்தினர் அழிக்கப்பட்டனர் என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

டெலோ இயக்கத்தினர் எங்களை தாக்க தயாராகிக் கொண்டிருந்தனர். நாங்கள் முந்திக் கொண்டு அவர்களை தாக்கினோம் என்று விடுதலை புலிகள் கூறுகின்றனர். என்றாலும் அவர்களது கூற்றில் உண்மை காணப்படவில்லை.

ஆதாரம்

தினமணி சென்னை,

மே 13, 1986 ★

படிப்பகம்

www.padippakam.com

## போராளிகளிடையே மோதல்

# கிழக்கு மாகாண இளைஞர்களே அதிகம் கொல்லப்பட்டனர்

யாழ்ப்பாணம், மே 12— சமீபத்தில் தமிழ் ஈழ விடுதலை புலிகளுக்கும் தமிழ் ஈழ விடுதலை ஸ்தாபனத்துக்கும் ('டெலோ') இடையே நடந்த ரத்தக் களறியில் கொல்லப்பட்ட தமிழ் போராளிகளில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மாகாணத்தைச் சேராதவர்கள் என யாழ்ப்பாணத்தில் தகவலறிந்த வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படுகொலைகளுக்கு உடனடியாக மக்களிடையே எதிர்ப்பு ஏற்படாததற்கு இதுவும் ஒரு காரணம் என்று தகவலறிந்த வட்டாரத்தைச் சேர்ந்த ஒருவர் கூறினார். கொல்லப்பட்ட 100-லிருந்து 150-க்கு உட்பட்ட போராளிகளில் பெரும்பாலானவர்கள் 'டெலோ' ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் கிழக்கு மாகாணத்தின் கிராமப்புறங்களிலிருந்து வந்தவர்கள் என்றும் அவர் சொன்னார்.

1984-ம் ஆண்டுக்குப் பிறகு போராளிகளின் படைகளில் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் மாகாணத்தைச் சேராதவர்களே; குறிப்பாக கிழக்கு மாகாண கிராமப்புறங்களிலிருந்து வந்து போராளிகள் முகாமில் சேர்ந்தவர்கள் அதிகமாக உள்ளனர். வசதி படைத்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தங்களின் மகன்களை ஐரோப்பா அல்லது இந்தியாவுக்கு அனுப்பிவிட்டனர். ஏனெனில் 12-லிருந்து 13 வயதுக்குட்பட்ட சிறுவர்களை போராளிகள் தங்கள் படையில் சேர்த்து வந்தனர்.

'டெலோ' ஸ்தாபனத்திலுள்ள யாழ்ப்பாணம் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள், விடுதலைப் புலிகள் அவர்களைத் தேடிய போது, தங்களுக்குத் தெரிந்த மறைவிடங்களில் சென்று பதுங்கிக் கொண்டனர். ஆனால் வெளி மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் சரியான பதுங்குமிடம் தெரியாததால் விடுதலைப் புலிகளிடம் சிக்கிக் கொண்டனர்.

### பெட்ரோல் ஊற்றி எரிப்பு

திண்ணைவெலி, மல்லாகம், சாவகச்சேரி, நல்லாரம், தெல்லிபாளை ஆகிய இடங்களில் 'டெலோ' உறுப்பினர்கள் (இவர்களில் சிலர் 13 அல்லது 14 வயதுடையவர்கள்) பெட்ரோல் ஊற்றி உயிருடன் கொளுத்தப்பட்டனர். இதுபற்றி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒருவர் கூறுகையில் "1983 ஜுலை கலவரங்களின்போது கொழும்பு வீதிகளில் தமிழர்களை சிங்களவர்கள் உயிருடன் கொளுத்தினார்கள். அதே செயலை இப்போது செய்துள்ள போராளிகள் அவர்களைவிட எவ்விதத்தில் மேம்பட்டவர்கள்?" என்று கேட்டார்.

"டெலோ" ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களை வேட்டையாடுவதற்காக விடுதலைப் புலிகள் கோவில்களுக்குள்ளும், பல்கலைக்கழக வளாகத்திற்குள்ளும் நுழைந்தனர். பாதுகாப்புப் படையினர் இவ்வாறு நுழைந்தபோது ஆட்சேபித்த விடுதலைப் புலிகள் இப்போது அதே காரியத்தை எவ்வாறு செய்யலாம் என்று அந்த யாழ்ப்பாண வாசி கூறினார்.

### எதிர்ப்பு தெரிவிக்காத "டெலோ"

தமிழர் சகோதரர்களை கொல்ல மனம் வராததால் "டெலோ" உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளை எதிர்க்கவில்லை என யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிலர் கூறினர். சில இடங்களில் கும்பிட்ட கைகளுடன் சரணடைந்த சிறுவர்கள் வெறித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

"இந்த மோதல்களில் சிக்கிக் கொள்வதை விட, சொந்த ஊர் திரும்பி ராணுவத்தினரின் கைகளில் சாவதே மேல்" என்று சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் சிலர் உள்ளூர் மக்களிடம் கூறியுள்ளனர்.

இந்த அனைத்து சம்பவங்களிலும் விடுதலைப் புலிகள் மனிதாபிமானத்துடன் நடந்துகொண்டதாக ஒன்றே ஒன்றை மட்டும் கூறலாம்.

படுகொலை செய்யப்பட்ட "டெலோ" தலைவர் சிறீ சபாரத்தினத்தின் உடலை விடுதலைப் புலிகள் அவரது தந்தையிடம் எடுத்துச் சென்றனர். "தனது மகன் முதுகில் சுடப்படாமல் மார்பில் குண்டடிபட்டு இறந்துள்ளதை"க் கண்டு தாம் மகிழ்ச்சி அடைவதாக சடலத்தைப் பார்த்த சபாரத்தினத்தின் தந்தை கூறினார். ஆனால் அவர் சடலத்தை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால், விடுதலைப் புலிகளே சடலத்தை எரித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

### ஆட்சேபம் செய்வதற்கு மிரட்டல்

இந்தப் படுகொலைகளை எதிர்த்து ஆட்சேபங்கள் எழுப்ப நடந்த சில முயற்சிகள் தோல்வியடைந்தன. நல்லூரில் ஆட்சேப ஊர்வலம் நடத்த பெண்கள் முயற்சித்தபோது விடுதலைப் புலிகள் அவர்களை 'டெலோ' ஆதரவாளர்கள் எனக்கூறி வாயை நோக்கிச் சுட்டனர். இதையடுத்து பீதியடைந்த பெண்கள் ஓடிவிட்டனர்.

யாழ்ப்பாண பிரஜைகள் கமிட்டி மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொள்ள எவ்வளவோ முயற்சி செய்ததாகவும், ஆனால் ஒருவர் கூட கிடைக்கவில்லை என்றும் தகவலறிந்த வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்தப் படுகொலைகள் தொடர வேண்டும் என்பதற்காகவே விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இவர்களுடன் தொடர்பு கொள்ளவில்லை என்று அந்த வட்டாரத்தில் மேலும் கூறப்பட்டது.

### படுகொலைக்கு காரணம்

இலங்கை அரசுடன் தமிழர் பிரச்சினை பற்றி மீண்டும் பேச்சு நடத்த இந்திய தூதுக் குழுவினர் கொழும்பு வந்த சமயத்தில்-ஏப்ரல் 29லிருந்து மூன்று நாட்களுக்கு-இந்தப் படுகொலைகள் நீடித்தது. இதனால் மக்களிடையே ஏற்பட்ட கோபம் காரணமாகவோ என்னவோ, சபாரத்தினத்தின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து வெள்ளி அன்று யாழ்ப்பாணத்தில் 'ஹர்த்தால்' அனேகமாக முழு அளவுக்கு நடந்தது. ஈழப் புரட்சி விடுதலை முன்னணி இந்த ஹர்த்தாலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. ஹர்த்தாலில் கலந்து கொண்டால் அடுத்த முறை ராணுவத்தினர் வரும்போது பாதுகாப்பு அளிக்க இயலாது என வியாபாரிகளுக்கும், பஸ் உரிமையாளர்களுக்கும் விடுதலைப் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தும், பெரும் ஆதரவுடன் இந்த ஹர்த்தால் நடந்தது குறிப்பிடத்தக்கது.

அதிகாரப் போராட்டத்தின் காரணமாகவே இந்த மோதல்கள் நடந்ததாக அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். யாழ்ப்பாணத்தின் "முழு கட்டுப்பாட்டையும்" மேற்கொள்வதற்காக இதர சிறிய போராளிகள் கோஷ்டிகளையும் விடுதலைப் புலிகள் ஒடுக்கி விடுவார்கள் என்று அவர்கள் கூறினர்.

இந்திய அரசின் ஆதரவில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணவும், பாரம்பரியமான அரசியல் பாதைக்கு திரும்பவும் "டெலோ" தயாராக இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் நோக்கமே வேறாக உள்ளது. தனி ஈழநாடு வேண்டும், விடுதலைப் புலிகளின் ராணுவ அமைப்பின் முழு கட்டுப்பாட்டின் கீழ் அது அமைய வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர்.

தங்கள் மீது தாக்குதல் நடத்த 'டெலோ' இயக்கத்தினர் திட்டமிட்டிருந்தனர் என்றும்; அதை தாங்கள் முறியடித்து விட்டதாகவும் விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். ஆனால் படுகொலை செய்யப்பட்ட போதும் எதிர்ப்பே தெரிவிக்காத "டெலோ" இயக்கத்தினர் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாகக் கூறப்படுவதை யாரும் நம்பத் தயாராக இல்லை.

### இந்திய எதிர்ப்பு சுவரொட்டிகள்

இந்திய தூதுக்குழுவினர் இலங்கை அரசுடன் பேச்சு நடத்த வரும் சமயத்தில் யாழ்ப்பாணம் நகரில் இந்திய எதிர்ப்பு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகள்தான் இந்த சுவரொட்டிகளை ஒட்டியதாக அனைவரும் கூறுகின்றனர்.

'டெலோ' ஸ்தாபனத்தினர் அழிக்கப்படுவதுபோல, இந்திய ராணுவத்தினர் யாழ்ப்பாணத்திற்கு வருவதைத் தடுக்க மக்கள் தயாராக வேண்டும் என்று ஒரு சுவரொட்டியில் கூறப்பட்டுள்ளது.

மற்றொரு சுவரொட்டியில் வங்கதேச சுதந்திரப் போராட்டத்தின்போது இந்திய ராணுவம் அங்கு அட்டூழியம் செய்ததாகவும், இலங்கை ராணுவத்தினரைப்போலவே இந்திய ராணுவத்தினரும் யாழ்ப்பாண பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமையை ஏற்படுத்துவார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆதாரம்

தினமலர் சென்னை 13.5.86